**செய்தி குறிப்பு எண்.64** **நாள்: 19.10.2009**

**தேசிய வேளாண் பயிர் காப்பீட்டுத் திட்டத்தின் கீழ் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு இழப்பீட்டு தொகை வழங்குதல்.**

2008 நவம்பர் மாதத்தில் நிஷா புயலினால் பாதிக்கப்பட்ட நெல் பயிர்களுக்கு 2008–09 ஆம் ஆண்டில் பயிர் காப்பீடு செய்த விவசாயிகளுக்கு பயிர் இழப்பீட்டு தொகையாக ரூ.651.66 கோடி மத்திய மற்றும் மாநில அரசுகள் இணைந்து ஒப்பளிப்பு செய்தது. இத்தொகையில் மாநில அரசின் 50% பங்கான ரூ. 306.477 கோடி மற்றும் இந்திய வேளாண் பயிர் காப்பீட்டு கழகத்திடம் உள்ள பிரிமீயத் தொகையான ரூ.19.353 கோடியும் சேர்த்து ரூ.325.83 கோடி மாண்புமிகு தமிழக முதல்வரின் ஆணையின்படி அக்டோபர் முதல் வாரத்தில் திருவாரூர். நாகப்பட்டினம், தஞ்சாவூர், இராமநாதபுரம், புதுக்கோட்டை, கடலூர், சிவகங்கை, திருச்சி, மதுரை, திருவண்ணாமலை, விருதுநகர், காஞ்சிபுரம், விழுப்புரம், பெரம்பலூர், கரூர், திருவள்ளூர், சேலம், கிருஷ்ணகிரி, திருநெல்வேலி மற்றும் தேனி ஆகிய 20 மாவட்டங்களில் பாதிக்கப்பட்ட 5,36,352 விவசாயிகளுக்கு வழங்கப்பட்டது.

மத்திய அரசு தனது 50% பங்கான ரூ. 306.477 கோடி மற்றும் இந்திய வேளாண் பயிர் காப்பீட்டு கழகத்திடம் உள்ள மீத பிரிமீயத் தொகையான ரூ.19.353 கோடியும் சேர்த்து ரூ.325.83 கோடியில் முதல் கட்டமாக ரூ.65.17 கோடி விடுவித்துள்ளது. இத்தொகையில் புதுக்கோட்டை, கடலூர், சிவகங்கை, திருச்சி, மதுரை, திருவண்ணாமலை, விருதுநகர், காஞ்சிபுரம், விழுப்புரம், பெரம்பலூர், கரூர், திருவள்ளூர், சேலம், கிருஷ்ணகிரி, திருநெல்வேலி மற்றும் தேனி ஆகிய மாவட்டங்களுக்கு இழப்பீடு தொகை முழுமையாக வழங்கப்படும். மேலும் இராமநாதபுரம் மாவட்டத்திற்கு வழங்கப்பட வேண்டிய மத்திய அரசின் பங்கான ரூ.24.53 கோடியில் தற்போது ரூ.21.86 கோடி மட்டுமே வழங்கப்படும். மத்திய அரசு அளிக்க வேண்டிய மீதத் தொகையான ரூ.260.66 கோடியை மத்திய அரசு விடுவித்த உடன் விடுப்பட்ட திருவாரூர், நாகப்பட்டினம், தஞ்சாவூர் ஆகிய மாவட்டங்களுக்கு முழுமையாகவும், இராமநாதபுரம் மாவட்டத்திற்கு எஞ்சியத் தொகையான ரூ.2.67 கோடியும் வழங்கப்படும்.

வீரபாண்டி எஸ். ஆறுமுகம்
வேளாண்மைத்துறை அமைச்சர்.

வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9.